கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 38/2017**

திரு. உதயகுமார் (D.W –4) **13.6.2025**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு **1, 5** பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. குறுக்கு விசாரணையின் போது என்னுடைய அப்பா பணியின் கம்பெனியில் வேலை பார்த்த போது LIC ல் ஆவணங்கள் உள்ளதாக சொன்னேன், அதன் விவரங்கள் என்னவென்றால் பனியன் கம்பெனியில் அப்பா வேலை பார்த்த போது எடுத்த LIC பாண்ட் எங்களிடம் உள்ளது. அது தற்சமயம் உள்ளதா என்றால் உள்ளது. பிரின்ஸ் டையிங் எந்த சர்வே எண்ணில் பூமியில் அமைந்துள்ளது என்றால் சர்வே எண் தெரியாது. அந்த பூமி எந்த வருடம் யார் கிரயம் பெற்றார்கள் என்றால் தெரியாது. அந்த சொத்திற்கு உரிய கிரைய ஆவணத்தை நான் பார்த்ததில்லை என்றால் சரி. பிரின்ஸ் டையிங் எந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது என்றால் தெரியாது. எந்த வருடம் பிரின்ஸ் டையிங் முடிந்தது என்றால் அது முடியவில்லை, ரன்னிங் தான் உள்ளது.

2. 2011 ஆம் வருடம் என்னுடைய தாத்தா ராமசாமி பிரின்ஸ் டையிங்கை மூடிவிட்டார் என்றால் தவறு. அதிலிருந்து மெஷின்களை விற்பனை செய்து வங்கி கடனை என்னுடைய தாத்தா கட்டினார் என்றால் தவறு. ரத்தினசாமி தாவாவில் சாட்சியம் அளித்துள்ளதை படித்துப் பார்த்தீர்களா என்றால் இல்லை. பிரின்ஸ் டையிங்கில் என்னுடைய அப்பா பங்குதாரராக இருந்து வேலை பார்த்து வந்தார் என்பதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் தனிப்பட்ட முறையில் ஆவணங்கள் எங்களிடம் இல்லை. பிரின்ஸ் டையிங்

நிறுவனத்திற்குரிய ஆவணங்கள் எதையும் நான் பார்த்ததில்லை என்றால் ஆமாம். பிரின்ஸ் டையிங் நிறுவனம் ராமசாமி கவுண்டரின் தனிப்பட்ட நிறுவனம் என்றால் தவறு.

3. ராமசாமி தான் பிரின்ஸ் டையிங்யில் தனிநபர் உரிமையாளராக இருந்து நடத்தி வந்தார் என்றால் தவறு, குடும்பமாக நடத்தி வந்தோம். ராமசாமிக்கு வீடு உள்ளதா என்றால் முருங்கபாளையத்தில் உள்ளது. அந்த வீடு ராமசாமிக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட வீடு என்றால் தவறு. அது ராமசாமியின் மனைவி என்னுடைய பாட்டியின் சரஸ்வதி பெயரில் உள்ளது. சரஸ்வதி தாவாவின் முதல் பிரதிவாதியாக உள்ளார் என்றால் ஆமாம். அவர் இன்று வரை உயிருடன் உள்ளார் என்றால் ஆமாம். பிரின்ஸ் டையிங் நிறுவனத்து சொத்தின் மொத்த பரப்பளவு என்ன என்றால் 1.50 ஏக்கர். ராமசாமிக்கு சொந்த ஊர் எது என்றால் குப்புச்சிபாளையம்.

4. ராமசாமி முதலில் என்ன வேலை பார்த்து வந்தார் என்றால் கதர் கடைக்கு வேலைக்கு சென்று வந்தார். ராமசாமி கவுண்டர் சொந்த தொழில் செய்துதான் தாவா சொத்துக்களை தனிப்பட்ட முறையில் கிரையம் பெற்றார் என்றால் தவறு. குடும்பமாக வேலை செய்தோம். ராமசாமி எப்போது இறந்து போனார் என்றால் டிசம்பர் மாதம் 2011 இறந்துபோனார். ராமசாமி இறப்பதற்கு முன்பு சர்க்கரை நோய் மற்றும் இதர நோய்களில் பாதிப்படைந்து இருந்தார் என்று சொல்லி உள்ளேன். அதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் இல்லை. மருத்துவமனைக்கு சென்று வந்தது தெரியும். மருத்துவமனை பில்கள் வைத்துள்ளீர்களா என்றால் இல்லை. எந்த மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்றால் கே.ஜி. மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டார்.

5. ராமசாமி கவுண்டர் இறப்பதற்கும் முன்பு வரை நல்ல உடல் நிலை மற்றும் இருந்து வந்தார் கே.ஜி. மருத்துவமனையில் சிகிச்சை எதுவும் எடுத்துக் கொள்ளவில்லை என்றால் தவறு அவருக்கு கே.ஜி மருத்துவமனையில் ஆஞ்சியோ செய்யப்பட்டது. அதற்கு ஆவணங்கள் வைத்துள்ளீர்களா என்றால் தேடிப் பார்த்து இருந்தால் சமர்ப்பிப்பேன். ராமசாமி கே.ஜி.ஹாஸ்பிடல் இருக்கும் அல்லது வேறு மருத்துவமனைக்கு வைத்தியத்திற்காக செல்லவில்லை. தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 21.7.2011 ம் தேதி அன்று ராமசாமி சரஸ்வதி பெயரில் பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தி உள்ளார் என்றால் அதைப் பற்றி தெரியாது. அதற்கு முன்பு சொத்துக்கள் வங்கியில் அடமானத்திற்கு இருந்தது. எந்த வங்கியில் அடமானத்திற்கு இருந்தது என்றால் கார்ப்பரேஷன் வங்கியில் இருந்தது. அடமானத் தொகை என்ன என்றால் சரியாக தெரியாது.

6. சாட்சி தன்னிச்சையாக முன்வந்து ராமசாமி எல்லோரையும் அழைத்து கடனை எல்லோரும் சேர்த்து அடைத்து பிரித்துக் கொள்ளும்படி உயில் எழுதி வைத்ததாகவும் அதன்படி செய்து கொள்ளுங்கள் என்று எல்லோரையும் வைத்து பேசினார் என்று கூறுகிறார். பேசியது என்ன ஆனது என்றால் யாரும் ஒப்புக்கொள்ளவில்லை ராமசாமி ஏற்படுத்தியதாக சொல்லும் உயில் ஆவணத்தை பார்த்துள்ளீர்களா என்றால் பார்த்துள்ளேன். உயில் ஆவணத்தின் வருடம் தேதி என்ன என்றால் தெரியாது. ராமசாமி கவுண்டர் உயிருடன் இருந்தவரை எந்த உயில் ஆவணமும் எழுதவில்லை என்றால் தவறு. எழுதியதாக அவரே சொன்னார். ராமசாமி எழுதியதாக சொல்லும் உயிலின் அடிப்படையில் தான் சொத்துக்களில் பாகம் கூறுகிறீர்களா என்றால் ஆமாம்.

7. ராமசாமி கவுண்டர் ஏற்படுத்திய தான செட்டில்மெண்ட் பத்திர விவரங்கள் தெரியாது என்று நான் கூறும்போது, அந்த ஆவணத்தில் உள்ள கையொப்பம் ராமசாமி உடையது இல்லை என்று எதை வைத்து கூறுகிறேன் என்றால் உயில் படி பிரித்துக் கொள்ளும்படி உங்களுடைய தாத்தா சொன்னதால் செட்டில்மெண்ட் ஆவணம் மோசடியாக இருக்கும் என்பதால் கூறுகிறேன். ஆறாம் பிரதிவாதி ராஜேஸ்வரி எனக்கு என்ன உறவு என்றால் அத்தை உறவு. அவருடைய கணவர் பெயர் என்னவென்றால் முத்துக்குமார். ராமசாமி ஏற்படுத்திய செட்டில்மெண்ட் ஆவணத்தில் முத்துக்குமார் ஒரு சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் தெரியாது.

8. பிரின்ஸ் டையிங் நிறுவனம் ராமசாமி, ரத்தினசாமி, கோவிந்தராஜ் ஆகியோர் சேர்ந்து கூட்டாக ஆரம்பித்து நிறுவனம் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் தவறு. கோவிந்தராஜ் பிரின்ஸ் டையிங் நிறுவனத்தை தொடர்ச்சியாக தனிப்பட்ட முறையில் நடத்தி வந்தார் என்று பொய் என்றால் சரியல்ல. ராமசாமி கவுண்டர் உயிருடன் இருந்தபோது பிரின்ஸ் டையிங்யில் இருந்த மிஷன்களை மற்றும் தொழிலை அவருடைய மனைவி சரஸ்வதிக்கு வர்த்தமான கடிதம் கொடுத்துள்ளார் என்றால் தவறு, இருக்க வாய்ப்பில்லை. வர்த்தமான கடிதத்தை நான் பார்த்ததில்லை என்றால் சரி. 22.11.2016 ம் தேதி அன்று சரஸ்வதியும், அவர்களுடைய மகள் சுமதியும் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை கூட்டாக சேர்ந்து தயாநிதி பெயருக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தி உள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது.

9. ராமசாமி சரஸ்வதி பெயரில் ஏற்படுத்திய தான செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் தயாநிதி பெயரில் ஏற்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திர விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். தற்சமயம் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சரஸ்வதி, தயாநிதி பெயருக்கு

ஒரு வர்த்தமான கடிதம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் எனக்குத் தெரியாது. முருகம்பாளையம் பொது கழிவு சுத்தகரிப்பு நிலையம் யார் உறுப்பினராக உள்ளார்கள் என்றால் ராமசாமியும், இரத்தினசாமியும் உறுப்பினர்களாக உள்ளார்கள். தவறாக சாட்சியும் அளிக்கிறேன் பிரின்ஸ் டையிங் நிறுவனத்தின் உரிமையாளர் என்ற அடிப்படையில் ராமசாமி மட்டும்தான் உறுப்பினராக இருந்தார் என்றால் தவறு.

10. பொது சுத்திகரிப்பு நிறுவனத்தில் பிரின்ஸ் டையிங் நிறுவனம் செலுத்த வேண்டிய தொகைகள் செலுத்தப்பட்டதா என்றால் செலுத்தப்படவில்லை. பிரின்ஸ் டையிங் நிறுவனத்தில் ராஜேஸ்வரி ப்ளீச்சிங் நிறுவனத்தில் இரண்டும் சேர்த்து பொது கழிவு சுத்திகரிப்பு நிறுவனத்திற்கு இரண்டு கோடி ரூபாய் செலுத்தியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. ராஜேஸ்வரி ப்ளீச்சிங் நிறுவனமும் பிரின்ஸ் டையிங் நிறுவனமும் கூட்டாண்மை நிறுவனம் என்று நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்து தற்சமயம் அசல் வழக்கு எண்.100/2017 வாதி தயாநிதியின் சுவாதீனத்தில் உள்ளது என்றால் தவறு. எல்லோருடைய சுவாதீனத்திலும் உள்ளது. தாவா சொத்து எல்லோருடைய சுவாதீனத்திலும் உள்ளது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் இல்லை.

11. அசல் வழக்கு எண்.38/2017 தள்ளுபடி செய்யப்பட வேண்டும் அசல் வழக்கு எண்.100/2017 வாதி கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.98/2017 தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் தவறு. என்னுடைய சாட்சியம் உண்மைக்கு புறம்பானவை ஏற்றுக் கொள்ளத் தேவையில்லை என்றால் சரியல்ல.

வழக்கு எண்.100/2017, வாதி குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.06.13 16:17:30 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.